Name : ____________________________ (   )          Marks: ____ / 20

Class : ____________          Date : ____________

Parent's Signature : ____________________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60-70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் உதவிச்சொற்கள் கொடுக்கப் பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| அழகான பூங்கா | வேடிக்கையாக இருந்தது |
| நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு | சினம் கொண்டு |
| குறும்புத்தனம் செய்ய | விரட்டித் தாக்கியது |
| கல்லை வீசினான் | காயம் ஏற்பட்டு |
| திடுக்கிட்டு விழித்தது | மருத்துவரை |

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PAPER 2 - 2013

PRIMARY 3

பெயர்: ____________________ மதிப்பெண்கள்: ___ / 60

வகுப்பு: ___ / ______ தேதி: ____________________

******************************

பெற்றோர் கையொப்பம்: ____________________

தேதி: ____________________

## அ. <u>சொற்பொருள்</u> (5 மதிப்பெண்கள்)

| |
|---|
| கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து **OAS** விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. |

1.என் **<u>அன்னை</u>** சமைத்த இறால் கறி ருசியாக இருந்தது.

(1) அக்காள்
(2) அம்மா
(3) பாட்டி
(4) அத்தை
( )

2. அவளது வீட்டின் **<u>அருகில்</u>** ஒரு நீச்சல் குளம் உள்ளது.

(1) பக்கத்தில்
(2) முன்னால்
(3) பின்னால்
(4) எதிரில்
( )

3. மாணவர்கள் கடற்கரையில் உல்லாசமாக **<u>பொழுதை</u>**க் கழித்தனர்.

(1) நாளை
(2) கிழமையை
(3) நேரத்தை
(4) தினத்தை
( )

4. ஆசிரியர் கேட்ட கேள்விக்கு ஹரி சரியான **<u>விடை</u>** அளித்தான்.

(1) வினா
(2) கதை
(3) பதில்
(4) கேள்வி
( )

5. இனிப்பு பண்டங்களை **<u>அதிகம்</u>** சாப்பிட்டதால், ஹேமாவுக்கு பல்வலி ஏற்பட்டது.

(1) கொஞ்சம்
(2) நிறைய
(3) எப்போதும்
(4) அடிக்கடி
( )

## செய்யுள் / பழமொழி

கீழ்க்காணும் செய்யுளை/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

6. ஐயம் __________ உண்.

1. விட்டு
2. இட்டு
3. பிட்டு
4. போட்டு

( )

7. ஏற்பது __________ .

1. புகழ்ச்சி
2. மகிழ்ச்சி
3. இகழ்ச்சி
4. நிகழ்ச்சி

( )

8. ஆறுவது __________.

1. சீற்றம்
2. கோபம்
3. ஆத்திரம்
4. சினம்

( )

9. __________ செய விரும்பு.

1. அறம்
2. தர்மம்
3. நன்மை
4. நல்லது

( )

10. எண்ணெழுத்து __________.

1. விலக்கேல்
2. இகழேல்
3. இகழ்ச்சி
4. விளம்பேல்

( )

SA2
தேர்வுத்தாள் - 1

<u>வேற்றுமை உருபுகள்</u>

வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது.

11 ராமு ________________ பூப்பந்து விளையாடினான்.

1) அப்பாவை 2) அப்பாவுடன்

3) அப்பாவிடம் 4) அப்பா ( )

12 கபிலன் ________________ வீடு திரும்பினான்.

1) பள்ளியிலிருந்து 2) பள்ளிக்கு

3) பள்ளியை 4) பள்ளியில் ( )

13 அந்த நடிகை ________________ நடிக்கிறாள்.

1) நாடகத்தை 2) நாடகத்தின்

3) நாடகத்துக்கு 4) நாடகத்தில் ( )

14 சிங்கம் ________________ துரத்தியது.

1) மானின் 2) மானுடன்

3) மானை 4) மான் ( )

15 புனிதா ________________ உதவி செய்கிறாள்.

1) அக்காவுக்கு 2) அக்காவுடன்

3) அக்காவை 4) அக்காவோடு ( )

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

காலை மணி ஏழு. கவிதா தாமதமாக எழுந்ததால் அவள் பள்ளிக்கு வாடகை உந்துவண்டியில் பயணம் செய்ய முடிவு செய்தாள். வாடகை உந்துவண்டியை எடுத்தால் பள்ளிக்கு நேரத்தோடு சென்றுவிடலாம் என அவள் எண்ணினாள். அதனால் அவள் வாடகை உந்துவண்டி நிறுத்தும் இடத்திற்குச் சென்றாள். அங்கே ஒரு பெரிய கூட்டமே வாடகை உந்துவண்டிக்காகக் காத்திருந்தது. கவிதா அந்த வரிசையில் நின்றாள்.

அப்போது அங்கே ஒரு முதியவர் வந்தார். அவர் இரு கைகளிலும் பைகளைத் தூக்கிக் கொண்டு சிரமப்பட்டு நடந்து வந்தார். அவர் வாடகை உந்துவண்டி எடுக்கப் போவதை உணர்ந்த கவிதா வரிசையைப் பார்த்தாள். அது மிக்வும் நீண்டு இருந்ததை உணர்ந்தாள். அந்த முதியவர் அந்த வரிசையின் கடைசியில் நின்றார்.

சிறிது நேரத்தில் கவிதா ஏறுவதற்கான வாடகை உந்துவண்டி வந்தது. உடனே அவள் பள்ளிக்குத் தாமதமாகச் சென்றாலும் பரவாயில்லை, அந்த முதியவருக்குத் தான் எடுக்க வேண்டிய வண்டியை விட்டுக்கொடுக்க முடிவு செய்தாள். அவள் வரிசையின் கடைசியில் இருந்த முதியவரை அழைத்து வந்து வண்டியில் ஏறச் சொன்னாள். முதியவர் கவிதாவுக்கு நன்றி கூறினாள். அதன் பிறகு, அவள் வரிசையின் இறுதிக்குச் சென்று மீண்டும் நின்று வாடகை உந்துவண்டிக்காகக் காத்திருந்தாள்.

பள்ளிக்குத் தாமதமாகச் சென்ற கவிதா தன் ஆசிரியரிடம் நடந்தவற்றைக் கூறினாள். ஆசிரியர் அவளுடைய நற்குணத்தைப் பாராட்டினார். கவிதா மகிழ்ச்சி அடைந்தாள்.

பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் **<u>எண்ணை</u>** அடைப்புக்குறிக்குள் எழுது. (10)

Q16 கவிதா ஏன் வாடகை உந்துவண்டி நிறுத்தும் இடத்திற்குச் சென்றாள்?

(1) வீட்டிற்குத் திரும்புவதற்காக
(2) பள்ளிக்குச் செல்வதற்காக
(3) வாடகை வண்டியின் வரிசையில் நிற்பதற்காக
(4) முதியவரை வழியனுப்புவதற்காக ( )

Q17 வாடகை உந்துவண்டி நிறுத்தும் இடத்திற்கு யார் வந்தார்?

(1) முதியவர்
(2) ஆசிரியர்
(3) கவிதா
(4) வண்டி ஓட்டுநர் ( )

Q18 கவிதா முதியவருக்கு எப்படி உதவினாள்?

(1) முதியவர் வண்டியில் ஏறும் வரை காத்திருந்தாள்
(2) முதியவர் வரிசையின் கடைசியில் நிற்பதைப் பார்த்தாள்
(3) கவிதா வரிசையின் கடைசியில் நின்றாள்
(4) முதியவருக்குத் தான் ஏற வேண்டிய வாடகை உந்துவண்டியை விட்டுக் கொடுத்தாள் ( )

Q19 கவிதா முதியவருக்கு உதவியதால் அவளுக்கு என்ன நடந்தது?

(1) முதியவர் அவளுக்கு நன்றி கூறினார்
(2) அவள் பள்ளிக்குத் தாமதமாகச் சென்றாள்
(3) அவளுக்கு வாடகை உந்துவண்டி கிடைக்கவில்லை
(4) வரிசையில் இருந்தவர்கள் அவளைப் பார்த்து முறைத்தனர் ( )

Q20 ஆசிரியர் ஏன் கவிதாவைப் பாராட்டினார்?

(1) அவள் பள்ளிக்கு நேரத்தோடு வர முயன்றதால்
(2) அவள் பள்ளிக்குத் தாமதமாக வந்ததால்
(3) அவள் முதியவருக்கு உதவியதால்
(4) அவள் ஆசிரியரிடம் நடந்ததைக் கூறியதால் ( )

உ. <u>மூவிடப்பெயர்</u> ( 5 மதிப்பெண்கள் )

சரியான சொல்லைக் கொண்டு நிரப்பு.

21. சிங்கத்தின் காலில் முள் குத்தி இருந்தது.

_______________ சத்தமாக கர்ஜித்தது.

22. மதுமித்தா பாட்டுப் போட்டியில் கலந்து கொண்டாள்.

_______________ முதல் பரிசு பெற்றாள்.

23. இந்தியப் பெண்கள் சேலை அணிந்து இருந்தார்கள்.

_______________ பார்ப்பதற்கு அழகாக இருந்தார்கள்.

24. ஹிஷாம் பட்டம் விட்டான்.

_______________ விட்ட பட்டம் உயரப் பறந்தது.


25. எறும்புகள் சுறுசுறுப்பாக காணப்பட்டன.

_______________ மழை காலத்துக்காக இரை சேர்த்தன.

## முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)

கோடிட்ட இடங்களை நிரப்பு.


சென்ற சனிக்கிழமை டீனாவின் அம்மாவுக்குப் பிறந்தநாள். டீனாவும் அவள் தம்பியும் அன்று 26. ______________ எழுந்தார்கள். இருவரும் தங்களுடைய அம்மாவுக்குப் பிடித்த வாழைப்பழக் கேக்கை 27. ______________. டீனாவின் தம்பி அந்தக் கேக்கையும் அவர்கள் வாங்கிய பரிசுப் பொருளையும் மேசையில் 28. ______________. டீனா தன் அம்மாவை எழுப்பச் சென்றாள். அம்மா வந்ததும், டீனாவும் அவள் தம்பியும் பிறந்தநாள் 29. ______________ கூறிப் பரிசைக் கொடுத்தனர். அம்மா இருவருக்கும் கேக்கை 30. ______________. பிறகு அவர்களை அணைத்து முத்தம் கொடுத்தார்.



<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் ( 3 மதிப்பெண்)</u>

<u>பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.</u>

# அம்பிகை புத்தகக் கடை



வாருங்கள் ! வாருங்கள் !!

**மாணவர்களே!!**

வந்து பயன் பெறுங்கள்!!!

மலிவு விற்பனை


31.1.2013

ஞாயிற்றுக்கிழமை


**காலை மணி 10 முதல் இரவு 9 மணி வரை**

பின்வரும் கதைப் புத்தகங்கள்
**மலிவான விலையில்**
கிடைக்கும்:

1. தூங்கும் அழகி
2. தேவதைக் கதைகள்
3. பறக்கும் காலணிகள்



தொலைபேசி எண்: 97815432



நீங்கள் ***மூன்று*** கதைப்புத்தகங்கள் வாங்கினால் ஒரு கதைப்புத்தகத்தை அன்பளிப்பாகப் பெறலாம்

**28 முதல் 30 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

31. எங்கு மலிவு விற்பனை நடைபெறுகிறது ?

(1) கடையில்
(2) அம்பிகை புத்தகக் கடையில்
(3) புத்தகக் கடையில் ( )

32. எந்தப் புத்தகம் மலிவான விலையில் கிடைக்கும் ?

(1) தேவதைக் கதைகள்
(2) பறக்கும் பறவைகள்
(3) சிரிக்கும் அழகி ( )

33. எத்தனை புத்தகங்கள் வாங்கினால் ஒரு புத்தகம் இலவசமாகக் கிடைக்கும் ?

(1) ஐந்து
(2) மூன்று
(3) நான்கு ( )

## சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது (9)

ஓர் அரசர் கடலில் பயணம் செய்யப் புறப்பட்டார். அவரோடு அவருடைய அமைச்சர்களும் வேலைக்காரர்களும் சென்றனர். அவர்களில் ஒருவன் கபிலன். அவன் இதுவரைப் படகில் பயணம் செய்தது இல்லை. படகு அலையில் அசைந்தது. அதைக் கண்டு கபிலன் பயந்து அலறினான்.

அங்கு இருந்த பயணிகள் அனைவரும் அவனுக்குத் தைரியம் அளித்தனர். ஆனாலும் அவன் பயம் தீரவில்லை. அவன் போட்ட சத்தம் அரசரின் காதுளுக்கு எட்டியது. அவர் நிம்மதியாகத் தூங்க முடியாமல் ஆத்திரம் அடைந்தார். படகில் இருந்த ஒரு பெரியவர் கபிலனின் பயத்தைப் போக்குவதாக அரசரிடம் சொன்னார். அரசர் மகிழ்ச்சி அடைந்தார். அந்தப் பெரியவர் சிலருடைய உதவியுடன் கபிலனைக் கடலில் தூக்கி எறிந்தார். அனைவரும் அவருடைய செயலை வியப்புடன் பார்த்தனர். கபிலன் கடலில் தத்தளதத்ான். பின் சிலர் கபிலனைக் காப்பாற்றி மீண்டும் படகுக்குக் கொண்டு வந்தனர்.

அப்போது கபிலன் பயந்து அலறுவதை நிறுத்தினான். அரசருக்கு ஒரே வியப்பாக இருந்தது. அரசர், பெரியவரிடம் கபிலனை எவ்வாறு அமைதிப்படுத்தினார் என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரியவர் முதலில் கபிலன் படகைக் கண்டு பயந்தான். கடலில் இருப்பதை விடப் படகு பாதுகாப்பானது என்பதை புரிந்துகொண்டான் என்றார்.

## வினாக்கள்

36. எது அலையில் அசைந்தது? (2 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

37. படகில் இருந்த பயணிகள் என்ன செய்தனர்? (2 மதிப்பெண்கள்)

38. அரசன் ஏன் ஆத்திரம் அடைந்தான்? (2 மதிப்பெண்கள்)

39. பெரியவர் கபிலனை எங்குத் தூக்கி எறிந்தார்? (2 மதிப்பெண்கள்)

40. இறுதியில் கபிலன் எதைப் புரிந்துகொண்டான்? (2 மதிப்பெண்கள்)

P3
TESTPAPER 13

விடைகள் ( Primary 3 - SA 2 2013 )

1. (2) 2. (1) 3. (3) 4. (3) 5. (2)

6. (2) 7. (3) 8. (4) 9. (1) 10. (2)

11. (2) 12. (1) 13. (4) 14. (3) 15. (1)

16. (2) 17. (1) 18. (4) 19. (2) 20. (3)

21. அது 22. அவள் 23. அவர்கள் 24. அவன் 25. அவை

26. காலையிலேயே 27. செய்தனர் 28. வைத்தனர் 29. வாழ்த்து 30. ஊட்டினார்

31. (2) 32. (1) 33. (2) 34. (1) 35. (3)

36. படகு அலையில் அசைந்தது.

37. படகில் இருந்த பயணிகள் கபிலனுக்குத் தைரியம் அளித்தனர்.

38. கபிலன் போட்ட சத்தத்தால் அரசனால் தூங்க முடியவில்லை. அதனால் அரசன் ஆத்திரம் அடைந்தான்.

39. பெரியவர் கபிலனை கடலில் தூக்கி எறிந்தார்.

40. இறுதியில் கபிலன் கடலில் இருப்பதை விடப் படகு பாதுகாப்பானது என்பதைப் புரிந்து கொண்டான்.

34. மலிவு விற்பனை எத்தனை மணிக்குத் தொடங்குகிறது ?

( 1 ) காலை மணி பத்திலிருந்து

( 2 ) காலை மணி பத்துக்கு முன்

( 3 ) இரவு மணி உன்பதுக்குப் பின் ( )

35. 'பறக்கும் காலணிகள்' எப்படிப்பட்ட புத்தகமாக இருக்கும்?

( 1 ) அகராதி

( 2 ) கட்டுரை

( 3 ) மந்திரக்கதை ( )

காலையிலேயே மாலையிலேயே செய்தனர் வரைந்தனர் விற்றார் வைத்தனர்